பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 07 2024 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் அவற்றை உரிய முறையில் பயன்படுத்தவும் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடி இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான 22-வது ஆண்டு உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

3. நாடு முழுவதும் புதிதாக எட்டாயிரத்து 800 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

4. நாட்டின் முக்கிய நகரங்களில் வானிலை மற்றும் மழை முன்னறிவிப்பு அமைப்பு பெரிய அளவில் மேம்படுத்தப்படும் என மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு துப்பாக்கி சுடும் வீரர் ககன் நரங் தலைமை வகிப்பார் என இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் அவற்றை உரிய முறையில் பயன்படுத்தவும் அனைவரும் உறுதியேற்க வேண்டும் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வர் அருகே உள்ள ஹரிடமடா கிராமத்தில் பிரம்ம குமாரிகள் அமைப்பின் தியான மையத்தை குடியரசுத் தலைவர் நேற்று திறந்து வைத்தார்.

அந்த அமைப்பு செயல்படுத்தும் நிலைத்தன்மைக்கான வாழ்க்கை முறை என்ற தேசிய இயக்கத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் தலைவர், காடுகள், மலைகள், நதிகள், என அனைத்துமே அனைத்து உயிரினங்களுக்கும் முக்கியமானவை என்று அவர் கூறினார்.

இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையை இந்தியக் கலாச்சாரம் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் போன்றவற்றால் சவால்கள் அதிகரித்துள்ளன என்று அவர் கூறினார்.

வெள்ளம், நிலச்சரிவு, நிலநடுக்கம், காட்டுத் தீ, போன்ற இயற்கை பேரிடர்கள் தற்போது அடிக்கடி ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

நமது அன்றாட வாழ்க்கையில் மேற்கொள்ளும் சிறிய மாற்றங்கள் சுற்றுச் சூழலைக் காப்பதில் பெரிய பலன்களை வழங்கும் என்று திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

கண்டோன்மண்ட் பகுதிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய பாதுகாப்பு எஸ்டேட் பணி பயிற்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அவர், கண்டோன்மண்ட் பகுதிகளில் மூலிகை தோட்டங்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்புத்துறைக்கு சொந்தமான நிலப்பரப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அவர் கூறினார்.

நில மேலாண்மையில் தொழில்நுட்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என்று திரு ஜெக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான 22-வது ஆண்டு உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

ரஷ்யா சென்றுள்ள அவர், அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புதினுடன் பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி கல்வி, கலாச்சாரம் உள்ளிட்டவற்றில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

மண்டல மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்தும் அவர்கள் பேச்சு நடத்தவுள்ளனர்.

பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு, ஜி20, கிழக்கு ஆசிய உச்சிமாநாடு மற்றும் ஐநா போன்றவற்றில் இணைந்து செயல்படுவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

முன்னதாக நேற்று இரவு பிரதமருக்கு ரஷ்ய அதிபர் விருந்தளித்தார்.

தமது பயணத்தின் அடுத்த கட்டமாக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆஸ்திரியா செல்லவுள்ளார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் புதிதாக எட்டாயிரத்து 800 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பத்தாயிரம் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சியவை விரைவில் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் விவசாயிகளுக்கு மேம்பட்ட தொழில்நுட்பம், கடன்கள், சிறந்த இடுபொருள்கள் மற்றும் அதிக சந்தை வாய்ப்புகளை வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

இதனால் தரமான பொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்ய முடிவதாக அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகள் தங்களது உற்பத்தியைப் பெருக்கவும் அவர்கள் தங்கள் விளைப்பொருட்களுக்கு நல்ல விலையைப் பெறவும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் சிறந்த பங்களிப்பை வழங்குவதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>>

நாட்டின் முக்கிய நகரங்களில் வானிலை மற்றும் மழை முன்னறிவிப்பு அமைப்பு பெரிய அளவில் மேம்படுத்தப்படும் என மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பாக, தில்லியில் நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், எதிர்பாராத வானிலை மாற்றங்களால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்க, முன்னறிவிப்பு முறையை மேலும் திறம்பட்ட வகையில் மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றார்.

தற்போது தில்லியில் 17 தானியங்கி வானிலை முன்னறிவிப்பு மையங்கள் உள்ளதாக அவர் கூறினார்.

மேலும் 50 அமைப்புகளை விரைவில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த தானியங்கி வானிலை முன்னறிவிப்பு அமைப்புகள், துல்லியமான முன்னறிவிப்புகளை வழங்கும் என்று அவர் கூறினார்.

மும்பையில் 2 ரேடார்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் மேலும் 4 ரேடார்கள் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னையில் ஏற்கனவே 3 ரேடார்கள் உள்ளதாக அவர் கூறினார்.

மெட்ரோ நகரங்களில் மட்டுமின்றி, 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட பிற நகரங்களிலும் வானிலை முன்னறிவிப்பு அமைப்புகள் மேம்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்புத் தகவல்கள் மீனவர்களுக்கு பெரிய அளவில் பயனளித்துள்ளன என்று திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் திரு மிருத்யுஞ்சய் மொஹாபத்ரா மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் கத்வா மாவட்டத்தில் ராணுவ வாகனங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் ஐந்து பேர் வீரமரணமடைந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்புப்படையினர் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது தீவிரவாதிகள் கையெறி குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினர்.

பாதுகாப்புப்படையினர் திருப்பி சுட்டதையடுத்து, தீவிரவாதிகள் தப்பி ஓடினர்.

காயமடைந்த ஐந்து வீரர்களும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து பாதுகாப்புப்படையினர் அப்பகுதியில் தேடுதலை தீவிரப்படுத்தியுள்ளனர்.

<<<<<<>>>>>

பிஜேபி தலைவரும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சருமான திரு ஜெ பி நட்டா இன்று கேரளா செல்கிறார்.

திருவனந்தபுரத்தில் இன்று நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழு கூட்டத்தில் பங்கேற்கும் அவர், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள உள்ளார்.

<<<<<<>>>>>

நடப்பாண்டில் கரீப் பருவத்தில் 378 லட்சம் ஹெக்டேரில் பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் 331 லட்சம் ஹெக்டேரில் மட்டுமே பயிர்கள் பயிரிடப்பட்டிருந்ததாகவும், இந்த ஆண்டு 14 சதவீதம் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

ஜார்க்கண்ட்டில் புதிதாகப் பொறுப்பேற்ற அமைச்சர்களுக்கு இலாகா பொறுப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற பின்னர் நேற்று அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டது.

12 பேர் கொண்ட அமைச்சரவையில் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் உள்துறை, பணியாளர் நலன் ஆகிய துறைகளை கவனிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் திரு சம்பை சோரனுக்கு நீர்வளத் துறை, உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி இலாகாக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸின் தீபிகா பாண்டே சிங்-கிற்கு விவசாயம், கால்நடை பராமரிப்பு மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அசாமில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து மழை வெள்ளத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 72 ஆக உயர்ந்துள்ளது.

மாநிலத்தில் 27 மாவட்டங்களில் 22 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனா்.

மாநிலம் முழுவதும் மூவாயிரத்து 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 49 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்துள்ளன.

பிரம்மபுத்திரா, பராக் மற்றும் அவற்றின் அனைத்து துணை நதிகளிலும் அபாய கட்டத்தை தாண்டி தண்ணீர் ஓடுகிறது.

மாநில அரசு, 245 நிவாரண முகாம்களையும், 298 நிவாரண விநியோக மையங்களையும் திறந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 53 ஆயிரத்துக்கும் மேற்பட்டோா் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனா்.

<<<<<<>>>>>

உத்தராகண்ட் மாநிலத்தின் சம்பாவத் மற்றும் உதம் சிங் நகா் மாவட்டங்களில் கனமழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிளில் முதலமைச்சா் திரு புஷ்கா் சிங் தாமி இன்று ஆய்வு செய்யவுள்ளாா்.

இந்நிலையில் உத்தராகண்ட்டில் சில இடங்களில் இன்றும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் ஆறு மாவட்டங்களில் உள்ள 200 கிராமங்கள் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளன.

லக்கிம்பூர் மாவட்டத்தில் 30 ஆயிரம் பேரும், ஷ்ரவஸ்தி மாவட்டத்தில் 44 ஆயிரம் பேரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் பள்ளிக்கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப்பணிகளில் மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மகாராஷ்ட்ராவில் மும்பை உள்ளிட்ட பல இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மும்பை, ராய்கட், ரத்னகிரி ஆகிய பகுதிகளுக்கு இன்று பிற்பகல் ஒரு மணிவரை அதிக கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புனே, தானே, சிந்துதுர்கா மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டின் மத்திய, கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாடு மற்றும் தெற்கு உள் கர்நாடக பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு துப்பாக்கி சுடும் வீரர் ககன் நரங் தலைமை வகிப்பார் என இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.

மேரி கோமுக்கு பதிலாக ககன் நரங் தலைமை வகிக்கவுள்ளதாக இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி.டி.உஷா கூறியுள்ளார்.

ஒலிம்பிக் தொடக்க விழாவில் டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமலுடன் இணைந்து பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து இந்திய கொடியை ஏந்திச் செல்வார் என்றும் பிடி உஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டி இத்தாலியில் இன்று தொடங்குகிறது.

வரும் 16-ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில், 38 நாடுகளை சேர்ந்த 234 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் இப்போட்டியில் 19 பேர் பங்கேற்கவுள்ளனர்.

<<<<<<END>>>>>